மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : " Individual farming " தனிப்பட்ட நபர்கள் சேர்ந்து ஆரம்பிக்கிறார்கள். அவர்கள் தனித்தனியாக நிலத்தை வைத்துக்கொண்டு எல்லோரும் சேர்ந்து ஒரு சங்கமாக அமைத்து, அந்த அமைப்பை நடத்துகிறார்கள். Joint farming அல்லது Collective farming என்பது எல்லோரும் சேர்ந்த நிலைமையில் இருப்பதால் சரியாக நடைபெறவில்லை என்று ஏற்கெனவே இருந்த அரசாங்கம் முடி வெடுத்திருக்கிறது. அந்த முடிவை ஏற்று செயல்படுத்தி வருகிறோம்.

Integration of Medical and Public Health Departments.

*218 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state —

(*a*) whether the two committees namely " Bhore Committee " and "A. L. Mudali .r Committee" have submitted their reports on reformation of Medical and Health Departments.

(*b*) whether those reports have recommended the merger of Public Health Department with Medical Department ; and

(*c*) the decision taken by the Government on those reco - mendations ?

வைத்திய, சுகாதார இலாக்காக்களை இணைத்தல்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) வைத்திய, சுகாதார இலாகாக்கள் சீர்திருத்தம் பற்றி "போர் கமிட்டி" "ஏ. எல். முதலியார் கமிட்டி" என இரு கமிட்டிகள் தங்களது அறிக்கைகளை சமர்ப்பித்தனவா ?

(இ) அந்த அறிக்கைகளில் பொதுச்சுகாதார இலாக்காவை வைத்திய இலாக்காவுடன் இணைக்க சிபார்சு இருக்கிறதா ?

(உ) அந்த சிபார்சின்மீது அரசாங்கம் எடுத்த முடிவென்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) and (இ) ஆம்.

(உ) இவ்விரண்டு இலாக்காக்களும் இப்போது இணைக்கப்பட்டுள்ளது.

திரு என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இந்த " Bhore Committee A. L. Mudaliar Committee " இரண்டும் இந்த யோசனையை தவிர்த்து வேறு என்ன யோசனை சொன்னார்கள் ? அதில் முக்கியமான யோசனை என்ன ? அதில் என்னென்ன அமுல் படுத்தப் போகிறார்கள். ? இப்போது என்னென்ன அமுல் செய்து இருக்கிறார்கள். ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : அது பற்றிய விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் சொல்லப்படும்.

Ottapidaram Water-supply Scheme.

*219. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the water-supply scheme for the villages in the area of Ottapidaram in Tirunelveli district has been sanctioned ;

(*b*) if so, whether Central grant will be given to this scheme ; and

(*c*) when this work will be taken up for execution ?

ஒட்டப்பிடாரம் பகுதி குடிதண்ணீர்த் திட்டம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு நகராட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருநெல்வேலி மாவட்டம் ஒட்டப்பிடாரம் பகுதி கிராமங்களுக்குக் குடி தண்ணீர்த் திட்டம் ஒப்பளிக்கப்பட்டுவிட்டதா ?

(இ) ஆமெனில் மத்திய சர்க்கார் மானியம் இந்த திட்டத்திற்கு அளிக்கப்படுமா ?

(உ) எப்பொழுது இதற்கான வேலை துவங்கும் ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ) இல்லை.

(இ) and (உ) கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, சென்ற ஆண்டைக் காட்டிலும், நெல்லை ஜில்லா, கோவில்பட்டி தாலுக்கா, ஒட்டப்பிடாரம் பகுதியில் இந்த ஆண்டு தண்ணீர் கஷ்டம் மிக அதிகமாக இருக்கிறது. அதற்கு ஏதாவது திட்டங்கள் போட்டு வேண்டிய ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : கிராமப் பகுதிகளுக்கு குடி தண்ணீர் திட்டமானது அந்தந்த ஊர் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களின் சட்டப்பூர்வமான நடவடிக்கையிலே உட்பட்டதாகும். ஆகவே அவர்களுடைய நிதி நிலையைக் கொண்டு இவற்றைப் பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அது பற்றிய செயற்குறிப்பு எதுவும் அரசாங்கத்திடமில்லை.

Bridge across Kottakudi river.

*220 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether representations have been received for the construction of a bridge across the Kottakudi River flowing through Koraikulam village of Thiruppullani in Ramanathapuram district ; and

(*b*) if so, the action taken thereon ?

கொட்டக்குடி ஆற்றுக்கு குறுக்கே பாலம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணியைச் சேர்ந்த கோரைக் குளம் என்னும் ஊருக்குக்குறுக்கே ஓடும் கொட்டக்குடி ஆற்றுக்குப் பாலம் கட்ட கேட்டு கோரிக்கைகள் வந்தனவா ?

(இ) ஆமெனில், அவற்றின் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, இந்த ஊர்க்காரர்கள் மதுரையிலிருந்து சர்க்காருக்கு மனு எழுதிவிட்டு, காங்கிரஸ் ஆபீசில் வந்து என்னையும் பார்த்துவிட்டுப் போனார்கள். அந்த ஊருக்குப் போக்கு வரத்து அற்றுப் போய்விட்டது. சாதாரண வண்டிகள் கூட போக முடியவில்லை என்று சொல்லிவிட்டுப் போனார்கள். இனிமேலாவது இதற்குத் தகுந்த தக்க நடவடிக்கை வேண்டும் ? பஞ்சாயத்து யூனியனுக்கு எழுதி பாலம் கட்ட வேண்டிய ஏற்பாடு செய்யப்படுமா ?